TAMIL NADU LEGISLATURE L...
5 - MAY 1972
MADRAS

தமிழ்நாடு சட்டப் பேரவை.

சனிக்கிழமை, 1971 டிசம்பர் 11.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர், திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

Ravana Kaviyam

* 244 *Q*.—THIRU A. SWAMIDHAS : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the ban on the Ravana Kaviyam written by Pulavar Kulandai has been lifted from May, 1971; and

(*b*) whether extracts of this book will be included in the curriculam for students of schools and colleges?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) ஆம்.

(இ) பள்ளிகளைப் பொறுத்தவரையில், பள்ளிப் பாடத்திட்ட அமைப்பை முழுவதும் மறு ஆய்வு செய்வதற்காக அரசு அண்மையில் பல குழுக்களை அமைத்திருக்கிறது. பள்ளிகளின் பாடத்திட்டத்தில் இந்தப் புத்தகத்திலிருந்து பகுதிகளை எடுத்துச் சேர்ப்பது பற்றி ஆலோசனை செய்யும் அதிகாரக்குழு, தமிழில் பாடத்திட்டங்களை மறு ஆய்வு செய்யும் குழுவாகும். கல்லூரி பாடத்திட்டங்களைப் பொறுத்தவரையில் பாடத்திட்டங்களைத் தெரிந்தெடுப்பதற்குப் பல்கலைக்கழகங்கள் தான் பொறுப்புள்ளவைகளாகும்.

திரு. எ. சுவாமிதாஸ்: தலைவர் அவர்களே, தடை செய்யப்பட்ட வேறு நூல்கள் எதற்காவது அந்தத் தடை இப்பொழுது நீக்கப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: "இராவண காவியம்" என்பதற்குத் தான் தடை நீக்கப்பட்டிருக்கிறது. மற்றவைகள்பற்றி பரிசிலிக்கப்பட்டு வருகிறது.

திரு. கோ. இளங்கோவன்: தலைவர் அவர்களே, இராவண காவியத்தின் இனிய தமிழ்த் தாய் வாழ்த்துப்பாடல்களையாவது பள்ளிகளில் இடம் பெறச் செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பள்ளிகளில் இடம் பெறுவதற்கும் கல்லூரிகளில் இடம் பெறுவதற்கும் அவற்றை ஆராய்ந்து தெரிந்தெடுக்கின்ற தகுதி யார் யாருக்கு இருக்கிறது என்பதை நான் முதல் கேள்விக்குப் பதில் அளித்தபோதே விளக்கியிருக்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: இந்த விஷயமாக ஸிலபஸ் தயாரிப்பதற்கு கமிட்டி ஏற்படுத்தப்பட்டதாக முதலமைச்சரவர்கள் வெளியிட்டார்கள். இந்தக் கமிட்டி ஏதாவது இடைக்கால அறிக்கை அல்லது சிபார்சுகளை அரசுக்குக் கொடுத்திருக்கிறதா? அப்படியானால் அதன்மீது அரசு ஏதாவது நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அதுபற்றிய விவரம் ஏதும் இல்லை.